TOTE/23

Don't write anything in this space

தேர்வு : தமிழ்நாடு பொதுப் பணிகளில் அடங்கிய சுற்றுலா அலுவலர் பதவிக்கான எழுத்துத் தேர்வு

பாடம் : கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் [தாள் – I] (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 10.06.2023 மு.ப.

TNPSC- SPECIMEN

Do not use this area

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : தமிழ்நாடு பொதுப் பணிகளில் அடங்கிய சுற்றுலா அலுவலர் பதவிக்கான எழுத்துத் தேர்வு

பாடம் : கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் [தாள் – I] (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 10.06.2023 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச் சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதில் அளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதிய பேனாவினால் குறுக்கு கோடிட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC - SPECIMEN

Do not use this area

# தாள் – I

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள்

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்பு தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 40 பெற்றால் மட்டுமே தாள்-II, தாள்-III மற்றும் தாள்-IV ஆகியன மதிப்பீடு செய்யப்படும்

2. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காக தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

3. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

8. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN
Do not use this area

## அலகு — 1 (அ)

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்ட தமிழ் பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 1 | உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் : கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.<br><br>(1) உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.<br><br>(2) உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே, இது ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துக்கள் மற்றும் கல்வியுடன் தொடர்புடையன.<br><br>(3) உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும். |

விடை

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

அலகு — 1 (ஆ)

*குறிப்பு:* ii) கொடுக்கப்பட்ட ஆங்கில பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்.

**(1 × 10 = 10)**

| Q.No. 2 | Article 360 authorises the President to declare financial emergency if he is satisfied that the financial stability or credit of India or of any of its parts is in danger. In this type of emergency salaries and allowances of any class of persons serving state or union including judges of the Supreme Court and High Court can be reduced by an order of the President. This type of emergency has not been declared in Indian so far. |
|---|---|

விடை

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

Do not use this area

*குறிப்பு:* i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | அறியாமையை நீக்கி அறிவைக் கொடுப்பது கல்வி ஆகும். மனிதர்களது வாழ்வில் உடலோம்பலும் அறிவோம்பலும் – அவசியமான ஒன்றாகவே உள்ளது. அறிவோம்பலுக்குக் கல்வி தேவையாகிறது. அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டியதில்லை. இது பற்றியே "இளமையில் கல்" என்றும் முதுமொழி பிறந்தது.<br><br>இந்நாளில் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை எங்கும் நிலவி வருகின்றது. ஏட்டுக் கல்வி மட்டுமே கல்வி ஆகாது இந்நாளில் கல்வி என்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பின்றிப் போகின்றது. தொழில் நோக்குடன் கல்வி பயிலுதல் இன்றி – என்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும். அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழில் துறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துதல் வேண்டும்.<br><br>நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறுதலே சிறப்பாகும். அதுவே இயற்கை முறையானதாகும். போதிய ஓய்வு நேரமும் வாய்ப்பும் இருக்குமெனின் வேறு மொழிகளையும் பயிலலாம். ஆனால் முதன் முதலில் தாய்மொழி வாயிலாகவே கல்வியைக் கற்க வேண்டும். |

விடை

TNPSC-SPECIMEN

TNPSC- SPECIMEN

Do not use this area

## அலகு — 3

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்.

**(5 × 2 = 10)**

Q.No. 4

பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர் ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார். மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்.

இக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அறிவுநிலையில் நடைமுறைக்கேற்ற வகையில் செயல்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் பெரியார் சிந்தித்தார். சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அவரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா? எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பினார். கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைபிடித்தவர்.

சமூகத்தின் அனைத்து நிலையினருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்வி உரிமையானது எனவும் சில பிரிவினருக்குக் கல்வி கற்க உரிமை இல்லை எனவும் கூறப்பட்ட கருத்துக்களைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார். பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் சமுதாயம் விரைவாக முன்னேறும் என்றும் பெரியார் நம்பினார்.

பெரியாரின் சிந்தனைகள் அறிவுலகின் திறவுகோல், பகுத்தறிவுப் பாதைக்கு வழிகாட்டி, மனித நேயத்தின் அழைப்பு மணி. ஆதிக்க உத்திகளுக்கு எச்சரிக்கை ஒலி, சமூகச் சீர்கேடுகளைக் களைவதற்கு மாமருந்து என்று அறிஞர்கள் மதிப்பிடுவர்.

1. தந்தை பெரியாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?

விடை

TNPSC- SPECIMEN

2. எந்தெந்த துறைகளில் பெரியார் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தார்?

விடை

3. மதங்கள் குறித்த பெரியாரின் கருத்து யாது?

விடை

4. பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்த கருத்து யாது?

விடை

TNPSC- SPECIMEN

5. பெரியார் குறித்த அறிஞர்களின் மதிப்பீடுகள் இரண்டினை எழுதுக.

விடை

TNPSC- SPECIMEN

Do not use this area

## அலகு — 4

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்ட சுருக்க குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 5 | தமிழர் வரலாறு தொன்மை வளமை வாய்ந்தது – இயற்கையோடு வாழ்ந்தனர் – சான்று ஏறு தழுவுதல் – கலித்தொகையில் ஏறு தழுவுதல் – முல்லைக்கலியில் களம் – காட்சி, கல்வெட்டு, புடைப்புச் சிற்பம் – ஆதாரங்கள் – சிந்துவெளியில் மாடு தழுவுதல் – ஐராவதம் மகாதேவன் கூற்று – உழவர் விழா – மாட்டுப் பொங்கல் – வேளாண் வாழ்க்கை – ஏறு தழுவுதல் வந்தது – சல்லி நாணயம் – மாட்டுக் கொம்பில் கட்டல் – சல்லி கட்டு – ஜல்லிக்கட்டு ஆனது. |

விடை

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

## அலகு — 5

*குறிப்பு :* i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.

ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) கொடுக்கப்பட்ட வினாவிற்கு 300 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| Q.No. | | |
|---|---|---|
| 6 | (அ) | உலக மதங்களுக்கெல்லாம் உரிய பொதுமறை திருக்குறள் என்பதைக் கடவுள் வாழ்த்து அதிகாரம் கொண்டு நிறுவுக. |
| | (ஆ) | திருக்குறள் ஒழுக்கமுடைமையின் மூலம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை கட்டுரைக்க. |
| | (இ) | நட்பு – குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. |
| | (ஈ) | 'வள்ளுவம் காட்டும் ஆளுமைப் பண்பு'களைத் தொகுத்து எழுதுக. |
| | (உ) | "திருவள்ளுவரும் நிலையாமைக் கோட்பாடும்" – கட்டுரைக்க. |

விடை

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

அலகு — 6

*குறிப்பு :* i) கடிதம் வரைதல்

ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.

iii) **250** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| Q.No. | | |
|---|---|---|
| 7 | (அ) | வேளாண்மை – உழவர் நலத்துறை – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021–2022 – வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையிலிருந்து செலவிடப்படாத தொகை ரூ. 75.52 கோடியினை வேளாண்துறைக்கும், பிற துறை திட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கக் கோரும் அரசு ஆணை ஒன்றை எழுதுக. |
| | (ஆ) | கர்ம வீரர் காமராசர் அவர்களின் கல்வி உதவித் தொகைத் திட்டம் வாயிலாக பள்ளிக் கல்வி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாணவர்களின் பட்டியல்கள் விபரக் குறிப்பினைப் பள்ளிக் கல்வித்துறை செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் ஆணை பிறப்பிக்கப்படும் வகையில் கடிதம் ஒன்றினைத் தயார் செய்க. |
| | (இ) | மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ் பயனடைந்த மக்கள் குறித்த விவரங்களை வட்டாட்சியர் சேகரித்துத் தலைமைச் செயலருக்கு அனுப்பக் கோரும் அலுவலக ஆணைக் கடிதம் வரைக. |

விடை

TNPSC- SPECIMEN

TNPSC- SPECIMEN

TNPSC - SPECIMEN

## அலகு — 7

*குறிப்பு :*

i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்

iv) ஐந்து பிரிவுக்கும் சேர்த்து இருபது மதிப்பெண்

**(5 × 4 = 20)**

| Q.No. 8 | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக : |
|---|---|
| | (1) மனம் |
| விடை | |
| | (2) குளிர் |
| விடை | |
| | (3) கல்வி |
| விடை | |
| | (4) அழகு |
| விடை | |

TNPSC- SPECIMEN

| Q.No. 9 | பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்க. |
|---|---|

(1) கண்ணீரும் கம்பலையும்

விடை

(2) ஊரும் பேரும்

விடை

(3) அல்லும் பகலும்

விடை

(4) வம்பு தும்பு

விடை

| Q.No. 10 | பிரித்தெழுதுக. |
|---|---|

(1) நிலாச்சோறு

விடை

(2) நீலக்கடல்

விடை

TNPSC- SPECIMEN

| | |
|---|---|
| | (3) பொய்ப்புகழ் |
| விடை | |
| | |
| | |
| | (4) சதுரப்பலகை |
| விடை | |
| | |
| | |
| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** |
| | (1) வீரர்கள் போருக்குச் சென்றனர். |
| விடை | |
| | |
| | |
| | (2) கண்ணன் குழல் ஊதினான் |
| விடை | |
| | |
| | |
| | (3) ஆழ்வார்கள் உரையில் வட சொற்கள் இருந்தன. |
| விடை | |
| | |
| | |
| | (4) வெற்றி பெறுவதற்கு மனவலிமை வேண்டும். |
| விடை | |
| | |
| | |
| Q.No. 12 | **பிழைநீக்கி எழுதுக :** |
| | (1) கொற்கைக் கடல் முத்துவலம் கொழித்தது. |
| விடை | |
| | |
| | |

TNPSC- SPECIMEN

|  |
| --- |
| (2) கடளும் கடள் சார்ந்த இடமும் தமிழரின் வாழ்நிலங்களுள் ஒன்று. |
| விடை |
|  |
|  |
| (3) இளமைப் பருவத்திலேயே கல்வி கர்க வேண்டும். |
| விடை |
|  |
|  |
| (4) நூல்களை ஆராய்ந்து ஆள்ந்து படிக்க வேண்டும். |
| விடை |
|  |
|  |

TNPSC- SPECIMEN

Do not use this area

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC- SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC- SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC- SPECIMEN

குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கான இடம்

TNPSC- SPECIMEN